***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 554/2020 – P.W. 4 (LW6)***

| | |
|---|---|
| *Name* | சந்தியா உதவி மருத்துவர்<br>திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *33* |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 05.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 24 மணி நேர பணியில் இருந்தபோது காலை 08.00 மணியளவில் மன்னார்குடி தென்வட 6 ம் தெருவை சேர்ந்த கணேசன் மகன் முத்து என்பவரை அவரது தம்பி முருகானந்தம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது தன்னை காலை 07.30 மணியளவில் மன்னார்குடி புதுத்தெருவில் தெரிந்த ஒரு நபர் சோடாபாட்டிலை கொண்டு தன்னை தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதித்தபோது இடது காது அருகில் 4X2X2 cm அளவுள்ள பிளவுகாயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தால் மேற்படி மருத்துவமனையில் நோயாளி அனுமதிஆகியதாக தெரியவரவில்லை. எனவே, மேற்படி நபருக்கு காயம் குறித்து கருத்துரை வழங்க முடியாது என்று சான்று

வழங்கினேன். **என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு உ/இ காய்சான்று அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாக்கதல் இன்றி பிற விதத்திலும் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் சரிதான். சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் Puncture wound ஏற்பட்டதாக குறிப்படப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் 07.30 pm என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எழுத்துபிழையாக உள்ளது.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.